**த. நா.ச.பே. எண் :05** **நாள் :05.12.2014**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், கச்சத் தீவை திரும்பப் பெறவும், பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீனவர்களின் மீன் பிடிக்கும் உரிமையை இலங்கை அரசு தடுக்காமல் இருப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இன்று (5.12.2014) முன்மொழிந்த அரசினர் தீர்மானம்:–

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உழவருக்கும் புலவருக்கும் உழைக்கும் தொழிலாளருக்கும்
மாணவருக்கும் மீனவருக்கும் மாண்புடைய மகளிருக்கும்
ஏழையருக்கும் எளியவருக்கும் ஏதுமில்லா வறியவருக்கும்
கனவிருக்கும் ஆசைகளை நனவாக்கி
வாழ்வின் இருள் அகற்றி ஒளியேற்றும்
தெய்வத் திருவிளக்கு ! தெய்வீக குலவிளக்கு !
மக்கள் முதல்வர், இதயதெய்வம், புரட்சித்தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களின்
பொற்பாதங்களுக்கு எனது முதல் வணக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தமிழகம் 1076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையினைக் கொண்டுள்ளது. இங்குள்ள 608 கடல் மீனவ கிராமங்களில் சுமார் 9.24 லட்சம் மீனவ மக்கள் உள்ளனர். 5,268 மீன்பிடி விசைப் படகுகளும், 31,172 பாரம்பரிய கலன்களும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தமிழகத்தில் கடல் மீன் உற்பத்தி 4.32 லட்சம் டன் ஆகும். தமிழ்நாட்டிலிருந்து 3,331.78 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மீன்பிடித் தொழில் என்பது மிகவும் பழமை வாய்ந்த தொழில் ஆகும். தங்கள் உயிரைப் பணயம் வைத்து கடலில் மீன் பிடிக்கும் மீனவர்கள் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதோடு, மதிப்பு மிகுந்த அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள்.

தமிழக மீனவர்கள் நலனில் அளவில்லா அக்கறை செலுத்தி வருபவர் மக்கள் முதல்வர், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியாவிலேயே

வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், மீனவர் நலனுக்காக பல்வேறு முன்னோடித் திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்தி மீனவக் குடும்பங்களைக் காத்து நிற்கும் கருணை கடல் மாதா எங்கள் அம்மா அவர்கள்.

கடந்த 2011 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட அன்றே மீன்பிடி தடைக் காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 1000 ரூபாய் உதவித் தொகையை 2000 ரூபாய் என இரட்டிப்பாக்கி உத்தரவிட்டதன் மூலம் மீனவர் பால் தனக்குள்ள மாறா அன்பை வெளிப்படுத்தினார்கள். மீன் பிடி குறைந்த காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகையாக 4000 ரூபாய் வழங்கும் ஒரு புதிய திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள். கடல் மீனவர்களுக்கான நிவாரணத் திட்டத்தின் கீழ் 2700 ரூபாய் உதவித் தொகை மீன்பிடி குறைவாக உள்ள காலங்களில் வழங்கப்படுகிறது. கடல் மீனவ மகளிருக்கு மீன்பிடி குறைவாக உள்ள காலங்களில் 2700 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த நிவாரணத் திட்டங்களுக்காக ஆண்டொன்றுக்கு 166 கோடி ரூபாயை தமிழக அரசு வழங்கி வருகிறது. மீனவர்களுக்காக குழுக் காப்பீட்டுத் திட்டத்தில் 50 விழுக்காடு சந்தா தொகையை தமிழ்நாடு அரசு செலுத்துகிறது.

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை எந்திரமயமாக்கும் வகையில் நாட்டுப் படகுகளில் இயந்திரங்கள் வாங்கிப் பொருத்துவதற்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் எந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளில் பயன்படுத்தப்படும் டீசலுக்கு விற்பனை வரி அறவே விலக்களிக்கப்பட்டுள்ளது. நாட்டுப் படகுகளுக்கு முற்றிலும் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானிய விலையிலான மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு 25 ரூபாய் வீதம் மாதமொன்றிக்கு 250 லிட்டர் வழங்கப்படுகிறது.

இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத வகையில், தொலைதூர கடல் பகுதியில் மீன் பிடிக்க ஏதுவாக புதிய சூரை மீன் படகு கட்டுவதற்கான ஆகும் உத்தேச செலவான 60 லட்சம் ரூபாயில் 50 விழுக்காடு, அதாவது அதிகபட்சமாக 30 லட்சம் ரூபாய் மானியம் வழங்கும் ஒரு உன்னதமான திட்டத்தை கொண்டு வந்தவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மீன் வளப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

மீனவக் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக கடல் சார் கல்வி பயிலும் மீனவ மாணாக்கர் ஒவ்வொருவருக்கும் 50000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்போது 5268 மீன்பிடி விசைப் படகுகளில், பெரும்பாலான விசைப் படகுகளில் தகவல் தொடர்பு சாதனங்கள் எதுவும் இல்லாததால், இந்த விசைப்படகுகளுக்கு மானிய விலையில் VHF ரேடியோ கருவிகள் வழங்கும் ஒரு திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதன்படி, 20,000 ரூபாய் விலையுள்ள VHF கருவிகளுக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. இதன் காரணமாக இடர் நேரும் காலங்களில் கரையில் இருக்கும் அரசு அலுவலர்களையும், குடும்பத்தினரையும் தொடர்பு கொள்ள இயலும். மேலும், ஐதராபாத்தில் உள்ள கடல் தகவல் பணிக்கான இந்திய தேசிய மையத்திலிருந்து பெறப்படும் தகவல்களை மீனவர்களுக்கு அனுப்ப இது பயன்படுகிறது. எனவே, மீனவர்கள் மீன்கள் நிறைந்த பகுதிகளுக்குள் சென்று மீன் பிடிக்க இத்திட்டம் உதவுகிறது.

இதைப் போன்று, தொலை தூரத்தில், ஆழ்கடல் பகுதியில் ஒரு மாதத்திற்கும் மேலாக தங்கி மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் படகுகளுக்கு தேவைப்படும் 2,50,000 ரூபாய் மதிப்புள்ள HF ரேடியோ கருவிகளுக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

மீனவர்கள் பிடித்து வரும் மீன்களின் தரத்தினைப் பாதுகாத்து, அவற்றின் மதிப்பினைக் கூட்டி மீனவர் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடி இறங்கு தளங்கள், மீன் பதனிடும் பூங்காக்கள் அமைத்தல் மற்றும் ஆற்று முகத்துவாரங்களை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் 508 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கடலூர் மாவட்டத்தில் சாமியார்பேட்டை, எம்.ஜி.ஆர். திட்டு, நாகப்பட்டினம் மாவட்டத்தில் செருதூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் முத்துக்கூடா, ராமநாதபுரம் மாவட்டத்தில் தேவிபட்டினம், ரோச்மாநகர், தூத்துக்குடி மாவட்டத்தில் தருவைக்குளம், திரேஸ்புரம் (விவேகானந்தர் காலனி), கன்னியாகுமரி மாவட்டத்தில் இனயம்புத்தன்துறை, சைமன் காலனி, குரும்பணை ஆகிய 11 இடங்களில் சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுவதற்கு ஏற்றவாறு ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மீன் உலர்தளம், உட்புற சாலை வசதி, தெரு விளக்கு வசதி, தண்ணீர் வசதி, கழிவு நீர்வடிகால் வசதி மற்றும்

அலுவலகக் கட்டடம் ஆகிய வசதிகளுடன் கூடிய மீன் இறங்குதளங்கள் 63 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடலூர் மாவட்டம் முடசலோடையில் உள்ள மீன் இறங்கு தளம் 7 கோடியே 78 லட்சம் ரூபாய் செலவில் விரிவாக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் 87 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் மீன்பிடி துறைமுகம் அமைக்கப்பட்டு வருகிறது.

காசிமேடு மீன்பிடி துறைமுகம் 75 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்படும் போதெல்லாம் அவர்களை மீட்க இடைவிடாத நடவடிக்கைகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள். 2011–ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திமுக அரசு பொறுப்பேற்றது முதல் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 57 கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன.

ஈரான் நாட்டுச் சிறையில் வாடிக் கொண்டிருந்த 16 தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுத்து தமிழகம் திரும்பிய அவர்களுக்கு புது வாழ்வு ஏற்படுத்த தலா 2 லட்சம் ரூபாயை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள். ஒடிசா மாநிலத்தில் புயலில் சிக்கித் தவித்த 18 தமிழக மீனவர்களை பத்திரமாக மீட்டு அவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கினார்கள்.

சவுதி அரேபியாவிற்கு வேலைக்குச் சென்று சிறையில் அடைக்கப்பட்டுள்ள 22 மீனவர்களை மீட்டெடுக்க மத்திய அரசை தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்தைச் சேர்ந்த திருவாளர்கள் எமர்சன், அகஸ்டஸ், வில்சன், பிரசாத், லேங்க்லெட் ஆகிய ஐந்து மீனவர்கள் கடந்த 28.11.2011 அன்று மீன்பிடி விசைப்படகில் ராமேஸ்வரம் மீன்பிடி தளத்திலிருந்து புறப்பட்டு தங்களது பாரம்பரிய மீன்பிடி பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் அவர்களை கைது செய்தனர்.

அவர்கள் மீது யாழ்ப்பாணம் மாகாணம் மல்லாகம் நீதிமன்றத்தில் போதைப்பொருள் கடத்துதல் குற்றத்திற்கான பிரிவின்கீழ் உள்நோக்கத்துடன் புனையப்பட்ட வழக்கு ஒன்றை இலங்கை அரசு தொடர்ந்தது. இந்த வழக்கு புனையப்பட்ட வழக்கு என்பதால், கைது செய்யப்பட்ட ஐந்து அப்பாவி மீனவர்களை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்போதைய பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம்

எழுதியதோடு, இந்த ஐந்து மீனவர்களையும் விடுவிக்க மீனவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வழக்காடுவதற்கு இலங்கையைச் சார்ந்த வழக்கறிஞர் ஒருவரை நியமித்திடவும், அவர்களை விடுவிப்பதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளை மேற்கொள்ளவும் இராமேசுவரத்திலுள்ள 'நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பு' (Alliance for Release of Innocent Fishermen Trust) மூலம் நடவடிக்கை எடுத்திட 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி **14.12.2011** அன்று ஆணையிட்டார்கள்.

தமிழக அரசின் நிதியுதவியுடன் ஐந்து மீனவர்களை ஜாமீனில் விடுவிக்க **21.3.2012** அன்று யாழ்ப்பாணம் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீது **11.6.2012** அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் மீனவர்களுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டு, அவர்கள் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் இம்மீனவர்களின் குடும்பங்கள், வருமானம் ஈட்டித் தரும் தங்கள் குடும்பத் தலைவர்கள் சிறையில் உள்ள நிலையில், அன்றாட குடும்பச் செலவிற்கு வருமானமின்றி துன்பப்படுவதால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடும்பம் ஒன்றிற்கு அவர்கள் கைது செய்யப்பட்ட நாளிலிருந்து முன்தேதியிட்டு மாதந்தோறும் **7,500/–** ரூபாய் வழங்கிட **6.8.2012** அன்று ஆணையிட்டார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையில் மேற்படி ஐந்து மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா **2,72,000/–** ரூபாய் வீதம் மொத்தம் **13,60,000/–** ரூபாய் உதவித் தொகையாக அவர்களுக்கு தமிழகம் திரும்பிய நாளான **20.11.2014** வரை முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

புனையப்பட்ட வழக்கில் சிக்கி அல்லலுறும் ஐந்து மீனவர்களின் குடும்பங்களுக்கு உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்பட்டு வந்த போதிலும், இக் குடும்பங்களின் பொருளாதார நிலையைக் கருணையுடன் பரிசீலித்து ஐந்து மீனவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, நிவாரண உதவித் தொகையாக தலா ரூபாய் இரண்டு லட்சம் வீதம் மொத்தம் பத்து லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்து மீனவர்களின் குடும்பத்தினருக்கும் **13.12.2012** அன்று வழங்கினார்கள். தாயகம் திரும்பிய இந்த மீனவர்களின் புதுவாழ்வுக்காக தலா **3** லட்சம் ரூபாய் வீதம் **15** லட்சம் ரூபாய் **20.11.2014** அன்று வழங்கப்பட்டது.

இந்த ஐந்து மீனவர்களை மீட்டெடுக்கும் உறுதியுடன் பல்வேறு ராஜாங்க மற்றும் சட்ட ரீதியான தொடர் நடவடிக்கைகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டார்கள். இந்த வழக்கினை தொய்வின்றி நடத்திடும் பொருட்டு கூடுதல்

நிதியாக மூன்று லட்சம் ரூபாய் வழங்கிட 8.2.2013 அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

அதாவது, வழக்குச் செலவிற்காக மட்டும் மொத்தம் 5 லட்சம் ரூபாய் மற்றும் குடும்ப நிதியுதவியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 4 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 28 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டுக்காக வழங்கப்பட்ட 20 லட்சம் ரூபாயும் சேர்த்து மொத்தம் வழங்கப்பட்ட தொகை 48 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய்.

ஐந்து மீனவர்களின் கைதுக்குப் பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, மீனவர்கள் கைது மற்றும் தாக்குதல் தொடர்பாக எழுதியுள்ள 9 கடிதங்களில், புனையப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டு அல்லலுறும் மீனவர்களின் நிலையையும், அவர்களின்றி வாடும் அவர்களது குடும்பங்களின் பரிதாப நிலையினையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் நேரிடை கவனத்திற்கு கொண்டு சென்று, ஏதுமறியா அப்பாவி மீனவர்களை உடனடியாக விடுவித்து அவர்களது குடும்பங்களுடன் ஒன்று சேர்த்திட உயர் மட்ட தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தினார்கள்.

இலங்கை–தமிழக மீனவர்களுக்கிடையேயான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை கொழும்பில் 12–5–2014 அன்று நடைபெற்ற போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையில் தமிழகம் சார்பில் இலங்கை– தமிழ்நாடு மீனவர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட மீனவ பிரதிநிதிகள் குழு மற்றும் அரசு அலுவலர்கள் இலங்கையின் வெளிக்கடை சிறையில் வாடும் மேற்படி ஐந்து மீனவர்களை நேரில் சந்தித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அம்மீனவர்களை விடுவிப்பதற்காக மேற்கொள்ளும் அனைத்து தொடர் நடவடிக்கைகளையும் எடுத்துக்கூறி, அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

போதைப் பொருள் கடத்தியதாக புனையப்பட்ட வழக்கில் 5 அப்பாவி தமிழக மீனவர்களுக்கு மரண தண்டனை விதித்து கொழும்பு உயர்நீதிமன்றம் 30.10.2014 அன்று தீர்ப்பு வழங்கியது. இது தொடர்பாக 5 அப்பாவி தமிழக மீனவர்களின் உயிரினை காக்கவும், அவர்கள் விரைவில் விடுவிக்கப்பட்டு தமிழகம் திரும்ப உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவும் மத்திய அரசினை தமிழக அரசு கேட்டுக் கொண்டது. மேலும், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் உரிய மேல் முறையீடு செய்திட இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தினை பணிக்கவும் மத்திய அரசை தமிழக

அரசு கேட்டுக் கொண்டது. இதன் விளைவாக இலங்கை உயர்நீதி மன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக இலங்கையின் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் இவ்வழக்கினை நடத்திட கொழும்புவிலுள்ள இந்திய தூதரகம் வழக்கறிஞர்களைக் கொண்ட குழுவினை இறுதி செய்தது. இந்திய தூதரகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்குச் செலவுக்காக 20 லட்சம் ரூபாயை தமிழக அரசு வழங்கியது.

5 அப்பாவி தமிழக மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தது தமிழகத்தில் மிகப் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சியினரும் ஒட்டு மொத்த தமிழக மக்களும் அவர்களுக்காக குரல் கொடுத்து மத்திய அரசு விரைந்து செயல்பட்டு, இந்த அப்பாவி மீனவர்களுக்கு விடுதலைப் பெற்றுத் தர வேண்டும் என கோரினர். அதன்படி பாரதப் பிரதமர் அவர்களும், மத்திய அரசும் இதில் தலையிட்டு இலங்கை அரசால் அப்பாவி மீனவர்கள் 5 பேரும் 19.11.2014 அன்று விடுவிக்கப்பட்டு 20.11.2014 அன்று தாயகம் திரும்பினர்.

தாயகம் திரும்பிய மீனவர்களை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் திருமதி. பா.வளர்மதி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.ஜெயபால், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் டாக்டர். எஸ்.சுந்தரராஜ் ஆகியோர் அவர்களை விமான நிலையத்திற்கே சென்று வரவேற்றனர். அப்போது, இந்த 5 மீனவர்கள் தங்கள் வாழ்க்கையை புதிதாக தொடங்குவதற்கு ஏதுவாக, ஒவ்வொருவருக்கும் 3 லட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழக அரசின் சார்பில் வழங்கினர். மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் மீனவர்களுடன் தங்கச்சிமடம் சென்று மீனவர்களின் உற்றார், உறவினர் மற்றும் கிராம மக்களின் மகிழ்ச்சியில் பங்கு கொண்டனர்.

தமிழக மீனவர்களின் பிரச்சனைகளுக்கு முக்கிய காரணம் கச்சத் தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது தான். எனவே, கச்சத் தீவை தாரை வார்த்த ஒப்பந்தங்கள் செல்லத்தக்கதல்ல என்று அறிவிக்கக் கோரி புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்கள். தமிழக அரசின் வருவாய்த் துறையும் இவ்வழக்கில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க இயலாமல் போனது கச்சத் தீவு ஒப்பந்தத்தினால் தான். தமிழக மீனவர்கள் கடல் எல்லையை தாண்டி விட்டார்கள் என சிறை பிடிக்கப்படுவதும், மீனவர்கள் மீது பொய் வழக்குப் போடுவதும், பாரம்பரிய மீன்பிடி உரிமையை இழந்த காரணத்தால் தான். எனவே தான் புரட்சித் தலைவி அம்மா

அவர்களும், அவர்கள் வழியில் செயல்படும் தமிழக அரசும், கச்சத் தீவு மீட்கப்பட வேண்டும், பாரம்பரிய மீன்பிடி இடங்களில் தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையை மீட்டுத் தர வேண்டும் என மத்திய அரசை தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

இலங்கை அரசால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்கள் மீட்கப்பட்டதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்தும்; இலங்கைச் சிறையில் இன்னமும் வாடிக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டு இன்னமும் திரும்ப வழங்கப்படாமல் உள்ள மீன்பிடி படகுகளை விடுவிக்கவும், கச்சத் தீவினை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். இதனை ஒரு மனதாக நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## தீர்மானம்

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரத்தைச் சேர்ந்த திருவாளர்கள் எமர்சன், அகஸ்டஸ், வில்சன், பிரசாத், லேங்க்லெட் ஆகிய 5 மீனவர்கள், கடந்த 28.11.2011 அன்று, மீன்பிடி விசைப் படகில், ராமேஸ்வரம் மீன்பிடி தளத்திலிருந்து புறப்பட்டுச் சென்று, தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இந்த 5 மீனவர்கள் போதைப் பொருள் கடத்தியதாக புனையப்பட்ட வழக்கு ஒன்றை அவர்கள் மீது இலங்கை அரசு தொடர்ந்தது. இலங்கை அரசால் புனையப்பட்ட வழக்குகளிலிருந்து அவர்கள் விடுதலை பெறுவதற்கு, ராமேஸ்வரத்திலுள்ள 'நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பு' (Alliance for Release of Innocent Fishermen Trust) மூலம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த 5 மீனவர்களின் குடும்பங்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகையாக தலா 7,500 ரூபாய் வழங்கப்பட்டது.

போதைப் பொருள் கடத்தியதாக புனையப்பட்ட வழக்கில் 30.10.2014 அன்று, கொழும்பு உயர் நீதிமன்றம், இந்த 5 அப்பாவி மீனவர்களுக்கும் மரண தண்டனை வழங்கியது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் இலங்கையின் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கவும், ராஜ்ஜிய நடவடிக்கைகள் மூலம் அவர்கள் விடுதலை செய்யப்பட நடவடிக்கை எடுக்கவும் மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக் கொண்டது. தமிழகத்தில் உள்ள அனைத்து

கட்சிகளும், ஒட்டு மொத்த தமிழகமுமே இந்த கோரிக்கையை வைத்தன. மத்திய அரசு மேற்கொண்ட ராஜ்ஜிய நடவடிக்கைகள் காரணமாக இந்த 5 மீனவர்கள் 19.11.2014 அன்று விடுவிக்கப்பட்டு, 20.11.2014 அன்று தாயகம் திரும்பினார்கள்.

5 மீனவர்களின் வழக்குச் செலவுக்காகவும், அவர்கள் சிறையில் இருந்த போது அவர்களின் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்திற்காகவும், மீனவர்கள் இந்தியா திரும்பியதும், புது வாழ்வு தொடங்குவதற்கு எனவும், மொத்தம் 63 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வழங்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் இந்தப் பேரவை பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்கள் விடுவிக்கப்பட நடவடிக்கை எடுத்த, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மத்திய அரசுக்கும் தனது பாராட்டையும், நன்றியையும், இந்த மாமன்றம் தெரிவித்துக் கொள்கிறது.

கடல் எல்லையைக் கடந்ததாக குற்றம் சாட்டப்பட்டு, இலங்கை சிறையில் வாடிக் கொண்டிருக்கும் 38 மீனவர்கள் உடன் விடுவிக்கப்பட தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என மத்திய அரசை இந்த மாமன்றம் கேட்டுக் கொள்கிறது.

இதுவன்றி, இலங்கை அரசால் கைப்பற்றப்பட்டு, அவர்கள் வசம் உள்ள 79 மீன்பிடிப் படகுகளை விடுவித்திட தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என இந்த மாமன்றம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து சிறை பிடிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் கச்சத் தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது தான். தமிழக மீனவர்கள் எவ்வித இன்னலுமின்றி தங்களுடைய வாழ்வாதாரத்தை மேற்கொள்ள ஏதுவாக கச்சத் தீவை திரும்பப் பெறவும், பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன் பிடிக்கும் உரிமையை இலங்கை அரசு தடுக்காமல் இருப்பதற்கும், தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்கவேண்டுமென இந்த மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

* * * * * * *

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**